# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2403/விசாரணை/E/2024**

திரு.சா.பரிமணம் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வட்டத் துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கிழக்கு, திருச்சி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 22.04.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அலுவலக வட்டத் துணை ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் 15.11.2025 அன்று நேரில் ஆஜராகி தாக்கல் செய்த அறிக்கைகளின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 09.01.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

1. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளர் கோரிய திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், திருச்சிராப்பள்ளி தாராநல்லூர் கிராமம், வார்டு P, பிளாக் 24, நகரளவு எண்.163 என்ற எண்ணில் வகைப்பாடு மாற்றம் செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை தகவலாக மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தில் 17.02.2026 அன்று நேரில் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

2. இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், திருச்சி மாவட்ட நிலஅளவைத் துறை உதவி இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள், 04.11.2025 தேதியிட்ட குறிப்பாணையின்படி, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று, இவ்வாணையத்தில் 17.02.2026 அன்று தவறாமல் திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அலுவலக வட்டத் துணை ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் திருச்சி மாவட்ட நிலஅளவைத் துறை உதவி இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

2. மேற்குறித்த இவ்வாணையத்தின் உத்தரவின் அடிப்படையில், திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அலுவலக வட்டத் துணை ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.கு.சித்தார்தன் 17.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவு பத்தி 5(1)-ன்படி

மேல்முறையீட்டாளருக்கு 31.01.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரியவாறு நகரளவு எண்.163 என்ற எண்ணில் வகைப்பாடு மாற்றம் செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்கள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் சார்பாக பெறப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் சார்பாக பெறப்பட்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. இவ்வாணையத்தின் 09.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 5(2) தொடர்பாக இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், திருச்சி மாவட்ட நிலஅளவை உதவி இயக்குநரின் 10.11.2025 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். மேற்குறித்த அறிக்கையில், திருச்சி மாவட்ட நிலஅளவை உதவி இயக்குநர், முன்னாள் பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூலமான விளக்கத்தை பெற்று இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

4. முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் தனது 07.11.2025 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தில், மணப்பாறை வட்டத்தில் வட்டத் துணை ஆய்வாளராக பணிபுரிந்த தனக்கு திருச்சி கிழக்கு வட்ட அலுவலகத்திலுள்ள பணிகளையும் கவனிக்க கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டதாகவும், இரு வட்ட அலுவலகத்திலுள்ள OPT மனுக்களை மேற்பார்வை செய்து கூராய்வு செய்ய வேண்டியிருந்ததாலும் உயர் அலுவலர்களின் புலத் தணிக்கைக்கு ஆஜராக வேண்டிய சூழ்நிலையில் தன்னால் மேற்கண்ட பணியினை உரிய காலத்தில் செய்ய இயலாத நிலை ஏற்பட்டதாகவும், மண்ப்பாறை வட்டத்தில் அனைத்து மனுக்களுக்கு உரிய காலத்தில் பதிவல் அளித்து உள்ளதாகவும், இரண்டு வட்டங்களுக்கு இடையே பணயம் செய்து OPT மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்ததால், தன்னால் உரிய காலத்திற்கு பதில் வழங்க இயலவிலை என்றும், தன்னை மன்னிக்குமாறும் இனி வருங்காலங்களில் ஒவ்வொரு மனுவின் மீதும் தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்தில் பதில் அனுப்பி விடுவதாகவும் தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

5. மேல்முறையீட்டாளருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.5,000/- ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், தற்போது இவ்வாணையத்தின் உத்தரவுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 06.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2403/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
உதவி இயக்குநர்/மேல்முறையீட்டு அலுவலர்,
மாவட்ட நிலஅளவைத் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி-1.

பொதுத் தகவல் அலுவலர்/வட்டத் துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கிழக்கு,
திருச்சி மாவட்டம்-620 008.

திரு.சா.பரிமணம் த/பெ.திரு.ப.சாம்பசிவம்பிள்ளை
1 பூலோகநாதர் சுவாமி கோவில் தெரு,
திருச்சி-620 008.

Copy to: File

RJ/PS 7.4